DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI

C.C.No.309/15

Deposition of Witness: PW 5

| | |
|---|---|
| Name குபேந்திரன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் சிவலிங்கநாயக்கன்பட்டியில் குடியிருந்து டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் சுருளியம்மாள் சார்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ராமசந்திரன் வேலுச்சாமி, சுருளியம்மாளுக்கு சொத்தை விற்று 25 வருடமாகிறது. 4 வருடத்திற்கு முன்பு சுருளியம்மாள் வீட்டின் முன்பாக 2லட்சம் தருமாறு சத்தம் போட்டார்கள். அப்போது ராமசந்திரன் , சுரேஷ், வேலுச்சாமி ஆகியோர்கள் சத்தம் போட்டார்கள். நான் ஜெயபிரகாஷ், ராஜேஷ், சௌந்தராஜன், விஜயபாண்டி நாங்கள் அனைவரும் பேசி போக சொல்லி அனுப்பி வைத்தோம். சுருளியம்மாளை பார்த்து புகார் கொடுத்து உன்னை உள்ளே தூக்கி வைததுவிடுவோம் என்று மிரட்டினார்கள். அவர்களும் புகார் கொடுத்தார்கள். சுருளியம்மாளும் புகார் கொடுத்தார். எஸ்பி அலுவலகம் குற்றபிரிவில் சுருளியம்மாள், விஜயபாண்டி, சௌந்தராஜன் மூவரையும் கூப்பிட்டார்கள். நான் ராஜேஷ், ஜெயபிரகாஷ், சௌந்தராஜன் மற்றும் ஊரில் உள்ள 10பேர்கள் அனைவரும் அவர்களுடன் சென்றோம். எஸ்பி அலுவலகத்தில் ஜாஸ்மின்மும்தாஜ் 5.00மணி வரைக்கும் உட்கார வைத்துவிட்டார்கள். நாங்கள் பேசி பார்த்தோம். 5.00மணி வரை உட்கார வைத்துவிட்டு ஒரு போலிஸ்காரருடன் பத்திர அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். அப்போது மணி 6.00ஆகிவிட்டது. பத்திர அலுவலகத்தில் சௌந்தராஜன் பத்திரத்தை வாபஸ் வாங்கினார். சுரேஷ், ராமசந்திரன், வேலுச்சாமி உடன் வந்தார்கள். அதன்பின்பு எஸ்பி அலுவலகத்திற்கு வரச்சொன்னார்கள். இன்ஸ்பெக்டர் அம்மா ஜாஸ்மின்மும்தாஜ் ராமசந்திரனுக்கும், வேலுச்சாமிக்கும் வாபஸ் செய்து கொடுங்கள் என்று மிரட்டினார்.

கு.வி இல்லை